**ஏப்ரல் – 17**

**"நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது." - 1யோவா 2 : 27**

கர்த்தரின் ஆசீர்வாதமும் வல்லமையும் தாவீதின் அபிஷேகத்தை ஏதோ விதத்தில் தொடர்ந்தன. அது எப்படி என்று நமக்குப் புரியாது. அறிவு முதலியவைகளில் முன்னேற அவனை சாத்தியமாக்கி, எதற்காக அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தானோ, அந்த உபயோகத்தின் வேலைகளுக்காக அவனைத் தகுதியும் ஆயத்தமுமாக்கிக் கொண்டு தொடர்ந்தன. இந்த அடையாளத்தின் நிறைவேறுதலாக, கர்த்தரோடு அங்கீகாரம் பெற்ற சமயத்திலிருந்து சபையின் மேல் வருகிற அபிஷேகத்தை நாம் யோசிக்க வேண்டாமா? நம்முடைய சரீர சம்பந்தமான அபிஷேகம் அல்ல. அளிக்கப்படுகிற ஆசீர்வாதங்கள் உலக சம்பந்தமானவைகளும் அல்ல. புதுசிருஷ்டிகளாக நாம் கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர, அது கிடைக்கிறது. பிறகு புது சிருஷ்டிகளாக முதலாம் உயிர்த்தெழுதலில் பூரணராக்கப்பட்டு, நமது தலையும் போதகருமான கர்த்தரோடு சிங்காசனத்துக்கு வருவோம். **-Z '03, 223 (R 3225).**

* * * * *

"அபிஷேகம் பண்ணப்பட்டவர்" ஒருவரை அல்ல, ஆனால் ஒரு கூட்டத்தாரைக் குறிக்கிறது. இது மூப்பராகிய விசுவாசிகளுடைய மனதிலே ஒரு பொழுதும் பிரவேசித்ததில்லை. ஆனால், சுவிஷேசயுக சபைக்கு இந்த ரகசியம் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. உண்மையுள்ளவர்களுக்கு இந்த அபிஷேகம் பண்ணப்பட்ட கூட்டத்தில் அவர்களுடைய நிலை பத்திரமாகத் தொடர்ந்திருக்கிறது. பிரதிஷ்டையில் அவர்களில் ஜெநிப்பிக்கப்பட்ட பரிசுத்த இருதயமும் மனதும் அவர்களுடைய சுதந்திரத்திற்கு அச்சாரமாக இருந்தது. இதுவே உண்மையுள்ளவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற தேவனுடைய உண்மையின் மாறாத வாக்குறுதி. **-P '30, 31.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

சங் 18:50; 20:6; 23:5; 45:7; எபி 1:9; சங் 89:20-23; ஏசா 11:2,3; 61:1-3; தானி 9:24; மத் 3:16,17; அப் 4:27; 10:38; 2கொரி 1:21; 1யோவா 2:20,27; 1கொரி 12:12,13; 15:23.

**கோபுர வாசிப்பு : Z '14, 297 (R 5549).**

**வினாக்கள்** : இந்தப் பாடம் இந்த வாரத்தில் எனக்கு என்ன அர்த்தமுள்ளதாயிருந்தது? எப்படி? பலன்கள் எவை?